(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 9]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, யூலை 11, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0021/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதியொருவருக்கு உரித்தான நன்மை களையும்,

(ii) இதற்கு உடன் முன்னைய சனாதிபதி, பதவியிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் அனுபவிப்பதற்கான குறித்த சில நன்மைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதா என்பதையும்,

(iii) அந் நன்மைகள் என்ன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட நன்மைகளை மட்டுமே அனுமதிக்கு மாறு உயர் நீதிமன்றம் பணித்திருந்தது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) அப்போதைய பிரதம அமைச்சரும் மற்றுமொரு குறிப்பிட்ட அமைச்சரும் உயர் நீதிமன்றத்திற்குத் தவறான தகவலைக் கொடுத்திருந்தனரா என்பதை யும்,

(ii) அப்படியாயின், எவ்வாறு இது நிகழ்ந்தது என்பதையும்,

(iii) இழப்பீடுகள் செலுத்துமாறு அவர்கள் கேட்கப்பட்டனரா என்பதையும்,

(iv) அப்படியாயின், இழப்பீடுகளை அவர்கள் செலுத்தினரா என்பதையும்,

(v) உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அப்போதைய அமைச்சரவை மீது பாதகமான விளைவுகளைக் கொண்டிருந்ததா என்பதையும்,

(vi) அப்படியாயின், அப்போதைய அமைச்சரவையின் மீது அந்த உயர் நீதி மன்றத் தீர்ப்பின் பாதகமான விளைவுகளின் விபரங்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0022/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) இற்றைவரைக்குமான கடந்த எட்டு வருடங்களாக -

(i) தேசிய லொத்தர் சபையின் செயல்நிறைவேற்றுகைகளையும்

(ii) கிரயத்தின் நூற்றுவீதமாக விற்பனையையும், மொத்த கிரயத்தின் நூற்று வீதமாக விளம்பரச் செலவினத்தையும் முகவர்களுக்கு வழங்கப்பட்ட தொகையையும் மற்றும் செலவின் நூற்றுவீதத்தையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய லொத்தர் சபையினால் நியமிக்கப்பட்ட முகவர்களின் எண்ணிக்கையையும்,

(ii) விளம்பரம் போன்றவற்றுக்காக அவர்களுக்குச் செலுத்தப்பட்ட கிரயத்தையும்,

(iii) உடனடிச் சுரண்டல் சீட்டுக்களையும் சாதாரண சீட்டுக்களையும் அச்சிடும் ஆளின் பெயரையும்,

(iv) அவை கேள்விப்பத்திரம் கோரல் மூலமாகவா வழங்கப்படுகின்றதா என்பதையும்,

(v) ஆமெனில், கடைசிக் கேள்விப்பத்திரத்தின் திகதியையும்,

(vi) கேள்விப்பத்திர நடைமுறைகள் இன்றி வழங்கப்பட்ட அச்சிடலின் முழுப் பெறுமதியையும்.

(vii) அவ்வாறு வழங்கப்பட்ட திகதியையும் காரணத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இணையத் தொடர்பு லொத்தர் இழப்புக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையையும்,

(ii) ஏற்பட்ட மொத்த இழப்பையும்,

(iii) அங்கீகாரம் அளித்த நபரின் பெயரையும்,

(iv) குறித்த இணையத் தொடர்பு நடவடிக்கையை இயக்கிய கம்பனிக்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கையையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) (i) 2007 மே 20 இல் கோட்டேயில் ஒரு லொத்தர் முகவருக்கு ஒதுக்கப்பட்ட சீட்டுகளில் நகல் வெளியீடு இருந்துள்ளதா என்பதையும்,

(ii) இம்மோசமான தவறு இடம்பெற்றுள்ளதா என்பதையும் எவ்வாறு இடம் பெற்றது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0024/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 சனவரி 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட COPE அறிக்கையை அவர் படித்தாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் இலங்கை மின்சார சபை, குறித்துச் சொல்லப்பட்ட விடயங்கள், மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை மின்சார சபையின் மொத்தக் கடன் எவ்வளவு என்பதையும்,

(ii) இலங்கை மின்சார சபையில் உள்ள பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை எவ்வளவு , என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0334/ '08

4.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு அரசுக்குச் சொந்த மான கட்டிடமொன்றில் தாபிக்கப்பட்டுள்ளதா இன்றேல் தனிப்பட்ட உரிமையாளரொருவருக்குச் சொந்தமான கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) தனிப்பட்ட உரிமையாளரொருவருக்குச் சொந்தமான கட்டிடமாக இருக்கும் பட்சத்தில் அதன் உரிமையாளரின் பெயர் யாதென்பதையும்,

(iii) அக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை எவ்வளவு என்பதை யும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(ஆ) (i) உரிய அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(ii) இந் நிறுவனங்கள் எவ்விடங்களில் அமைந்துள்ளன என்பதையும்,

(iii) இந் நிறுவனங்கள் அமைந்துள்ள கட்டிடங்கள் அரசுக்குச் சொந்தமான வையா இன்றேல் தனிப்பட்ட உரிமையாளர்களுக்குச் சொந்தமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தனிப்பட்ட உரிமையாளர்களது கட்டிடங்களில் பேணப்பட்டு வருகின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்,

(ii) அக்கட்டிடங்களின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்,

(iii) உரிய கட்டிடங்களின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0335/ '08

5.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெற்றோலியம், பெற்றோலிய வள அமைச்சு அரசுக்குச் சொந்தமான கட்டிடமொன்றில் தாபிக்கப்பட்டுள்ளதா இன்றேல் தனிப்பட்ட உரிமையாள ரொருவருக்குச் சொந்தமான கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதா என்பதை யும்,

(ii) தனிப்பட்ட உரிமையாளரொருவருக்குச் சொந்தமான கட்டிடமாக இருக்கும் பட்சத்தில் அதன் உரிமையாளரின் பெயர் யாதென்பதையும்,

(iii) அக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை எவ்வளவு என்பதை யும்,

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(ஆ) (i) உரிய அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(ii) இந் நிறுவனங்கள் எவ்விடங்களில் அமைந்துள்ளன என்பதையும்,

(iii) இந் நிறுவனங்கள் அமைந்துள்ள கட்டிடங்கள் அரசுக்குச் சொந்தமான வையா இன்றேல் தனிப்பட்ட உரிமையாளர்களுக்குச் சொந்தமானவையா என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தனிப்பட்ட உரிமையாளர்களது கட்டிடங்களில் பேணப்பட்டு வருகின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்,

(ii) அக்கட்டிடங்களின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்,

(iii) உரிய கட்டிடங்களின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0336/ '08

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சு அரசுக்குச் சொந்தமான கட்டிடமொன்றில் தாபிக்கப்பட்டுள்ளதா இன்றேல் தனிப்பட்ட உரிமையாள ரொருவருக்குச் சொந்தமான கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதா என்பதை யும்,

(ii) தனிப்பட்ட உரிமையாளரொருவருக்குச் சொந்தமான கட்டிடமாக இருக்கும் பட்சத்தில் அதன் உரிமையாளரின் பெயர் யாதென்பதையும்,

(iii) அக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை எவ்வளவு என்பதை யும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(ஆ) (i) உரிய அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(ii) இந் நிறுவனங்கள் எவ்விடங்களில் அமைந்துள்ளன என்பதையும்,

(iii) இந் நிறுவனங்கள் அமைந்துள்ள கட்டிடங்கள் அரசுக்குச் சொந்தமான வையா இன்றேல் தனிப்பட்ட உரிமையாளர்களுக்குச் சொந்தமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தனிப்பட்ட உரிமையாளர்களது கட்டிடங்களில் பேணப்பட்டு வருகின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்,

(ii) அக்கட்டிடங்களின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்,

(iii) உரிய கட்டிடங்களின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0390/ '08

7.

கௌரவ அசல ஜாகொடகே,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட் டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0391/ '08

8.

கௌரவ அசல ஜாகொடகே,— விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட் டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0392/ '08

9.

கௌரவ அசல ஜாகொடகே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0439/ '08

10.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காலி, கடேவெல்ல மீன்பிடி இறங்குதுறை கடற்றொழிலாளர்களால் பயன்படுதப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கடேவெல்ல மீன்பிடி இறங்குதுறைக்கு சேதம் விளைவிக்கக் கூடிய வகையில் மண் நிரப்பப்பட்டு காணி மீட்பதற்கு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அது எந்த நிபந்தனையின் கீழ்,

(iii) அனுமதியின்றி காணி மீட்கப்பட்டிருப்பின் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தால் காணி மீட்பினைச் செய்த தரப்பினருக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுமா,

(iv) ஆமெனில், அது எப்போது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) கடற்றொழிலாளர்களுக்குச் சொந்தமான இறங்குதுறையை மீட்பதில் தவறில்லையென அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0440/ ' 08

11.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 5 ஆண்டுகளில் வருடாந்தம் எத்தனை மெற்றிக்தொன் மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன, அவற்றின் பெறுமதி எவ்வளவு,

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் வருடாந்தம் எத்தனை மெற்றிக்தொன் மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டன, அவற்றின் நிதி ரீதியான பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இந்நாட்டில் மீன் உற்பத்தி போதாததன் காரணமாக, இவ்வாறு மீன் இறக்குமதி செய்யப்படுகின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) கடற்றொழிலாளர்களுக்கு அரசாங்கம் மானியங்களை வழங்கினால் இந்நாட்டில் மீன் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0441/ ' 08

12.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில வாரங்களுக்கு முன் கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதென்பதையும்,

(ii) மேற்படி, எரிபொருள் மானியம் அனைத்து கடற்றொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 28 அடி நீளமுள்ள ஒரு நாள் மீன்பிடி படகுகளுக்கும் பலநாள் மீன்பிடி கலங்க ளுக்கும் எரிபொருள் வழங்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) மேற்படி, மானியம் எவ்வளவு காலம் வழங்கப்படுமென்பதையும்,

(iii) ஒரு கடற்றொழிலாளருக்காக வழங்கப்படுகின்ற மானியத்தின் நிதிசார் பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0454/ ' 08

13.

கௌரவ விஜித ரணவீர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007ஆம் ஆண்டுக்காக அங்குனுகொபெலஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவுக்கு கமநெகும/ கெமி இசுர கருத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி பணம் பிரதேச செயலகப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றிருப்பின் அது எப்போதென்பதையும்,

(iii) இன்றேல் எப்போது வழங்கப்படுமென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பணத்தை உபயோகித்து மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திப் பணிகள் யாவையென்பதையும்,

(ii) அது எந்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் /கிராமத்தில் என்பதையும்

(iii) மதிப்பீட்டுத்தொகை, ஆரம்பிக்கப்பட்ட திகதி பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப் படும் திகதி யாவையென்பதையும்,

(iv) வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்காக விடுத்துள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

ஒவ்வொரு கருத்திட்டம் ரீதியாக தனித்தனியாக அவர் இச்சபையில் முன்வைப் பாரா?

(இ) (i) கருத்திட்டங்கள் செயற்படுகின்ற போது உள்ளூராட்சி சபையினர் / உறுப் பினர் எந்தெந்த பணிகளில் சம்பந்தப்படுகின்றார்களென்பதையும்,

(ii) அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அளவுகோல் யாதென்பதையும்,

(iii) அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை விடயப் பரப்பெல்லைக்குள் மேற்படி சபையினர் / உறுப்பினர் சம்பந்தப்படுத்திக்கொள்வது எவ்வாறு சட்டப்படியா கின்றதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0455/ '08

14.

கௌரவ விஜித ரணவீர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007ஆம் ஆண்டுக்காக வீரகெடிய பிரதேச செயலகப் பிரிவுக்கு கமநெகும/ கெமி இசுர கருத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வள வென்பதையும்,

(ii) மேற்படி பணம் பிரதேச செயலகப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றிருப்பின் அது எப்போதென்பதையும்,

(iii) இன்றேல் எப்போது வழங்கப்படுமென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பணத்தை உபயோகித்து மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் அபி விருத்திப் பணிகள் யாவையென்பதையும்,

(ii) அது எந்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் /கிராமத்தில் என்பதையும்

(iii) மதிப்பீட்டுத்தொகை, ஆரம்பிக்கப்பட்ட திகதி பூர்த்திசெய்ய எதிர்பார்க்க ப்படும் திகதி யாவையென்பதையும்,

(iv) வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்காக விடுத்துள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

ஒவ்வொரு கருத்திட்டம் ரீதியாக தனித்தனியாக அவர் இச்சபையில் முன்வைப்பாரா?

(இ) (i) கருத்திட்டங்கள் செயற்படுகின்ற போது உள்ளூராட்சி சபையினர் / உறுப்பினர் எந்தெந்த பணிகளில் சம்பந்தப்படுகின்றார்களென்பதையும்,

(ii) அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அளவுகோல் யாதென்பதையும்,

(iii) அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை விடயப் பரப்பெல்லைக்குள் மேற்படி சபையினர் / உறுப்பினர் சம்பந்தப்படுத்திக்கொள்வது எவ்வாறு சட்டப்படியாகின்றதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0457/ '08

15.

கௌரவ விஜித ஹேரத்,— கால்நடைவளர்ப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லுனுகம்வெஹர பிரதேச செயலாளர் பிரிவில் 'கடவர' எனப் பெயரிடப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ள ஒரு புல் நிலம் உள்ளதா,

(ii) இது ஒரு புல் நிலமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா,

(iii) ஆமெனில், அது எந்த அரச நிறுவனத்தில்,

(iv) புல் நிலத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணி திட்டவட்டமாக அளவிடப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளதா,

(v) அதன் பரப்பளவு எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி புல் நிலத்துக்குரிய காணியின் வரைபடப் பிரதியொன்றை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி புல் நிலத்தில் உள்ள குளங்கள் யாவை,

(ii) அவற்றில் தற்போது பயன்படுத்தப்படுகின்ற குளங்கள் யாவை,

(iii) அவற்றின் பரப்பளவு தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## **பிரேரணை முன்னறிவித்தல்**

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— இன்றைய தினம் அரசாங்க அலுவல்கள் முன்னீடடையுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 12.30 மணிவரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 3.30 மணிவரையும் இருக்குமாக. பி.ப. 2.30 மணிக்கு 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் பந்தி தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்தல்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 06, 2007) “வினைத்திறமை மிக்கதோர் நிர்வாகத்தை மேற்கொள்ளுமுகமாகவும் தமது அமைச்சர்களது செயற்பாடுகளை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கு ஏதுவான வகையில் சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [ பா.3/ ’05]

பா.1 / ’08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஆயுதங்களை பதிவு செய்தல்,— இலங்கையிலுள்ள அனைத்து ஆயுதங்களையும் பதிவுசெய்ய வேண்டுமெனவும் அவ்வாறு பதிவு செய்ததின் பின்னரும் யாரிடமாவது அதிகாரமற்ற ஆயுதங்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த நபருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு 20 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.2 / ’08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வங்கி அலுவலக நேரத்தை நீடித்தல்,— நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துமுகமாக வங்கி அலுவலக நேரத்தினை 9.00 மணி முதல் 16.00 மணிவரை நீடிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.3 / ’08

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுதல்,— மிக சுதந்திரமாகவே மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவது நாட்டின் ஒழுக்கவிழுமியங்களுக்கு பங்கமேற்படுத்தி வருவதால் கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலை யங்களையும் மூடிவிட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.4 / '08

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE ) அரசாங்கக் கணக்குக்குழு (PAC ) மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்களில் பிரசன்னமாயிருக்க அனுமதியளித்தல்,— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE ) அரசாங்கக் கணக்குக்குழு (PAC ) மற்றும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் மிக விளைபயனுடையதாகவும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் வெளிப்படையானதுமாக அமைய ஏதுவாக இருக்கும் என்பதால், ஊடகவியலாளர்களுக்கு அதில் பிரசன்னமாயிருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.5 / '08

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளை அளித்தல்,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக அதிகபட்ச கடனாக 2,50,000 ரூபாவை 5% குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.6 / '08

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.7 / '08

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.8 / '08

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற் படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறுமாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப் பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.9 / '08

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் போதும் ஒத்திவைக்கும் போதும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.10 / '08

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பா டகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.11 / '08

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப் படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயம்சாராத படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.12 / '08

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடக வியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.13/ '08

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாதாந்த சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.14 / '08

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.15 / '08

16.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.16 / '08

17.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.17 / '08

18.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.18 / '08

19.

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்று உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்திறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு ''விசேட வழக்குத் தொடுநர்'' எனப்படும் பதவியொன்று உருவாக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.19 / '08

20.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச் சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்ப்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தனிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.20 / '08

21.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கேகாலை மாவட்டத்தில் நூதனசாலை யொன்றினை தாபித்தல்,— கேகாலை மாவட்டத்தில் உள்ள புராதன, கலாச்சார, தேசிய விழுமியங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் தொல்பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலுமாக நூதனசாலையொன்று தாபித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.21 / '08

22.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தேசிய கொள்கை நிர்ணயம் தொடர்பில் தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.22 / '08

23.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலை செய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.23 / '08

24.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— புதிய கண்டுபிடிப்புகளை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப் பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக் கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு

அறிமுகப்படுத்துவதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற் காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.24 / '08

25.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளைமேற்கொள்ளும் உள்நாட்டு கைத் தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.25/ '08

26.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— நீதித்துறை, காவல்துறை மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமித்தல்,- சமூகத்தில் வியாபித்து வரும் குற்றச் செயல்களை குறைப்பதற்காகவும், குற்றவியல் சட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் குறைத்து அதனை மேம்படுத்தியும் காணித் தகராறுகள் உட்பட நீதிமன்றங்களில் குவிந்திருக்கும் விசாரணைகளின் தேக்க நிலையை நீக்குவதற்காகவும் மற்றும் நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகியவற்றினை நவீன மயப்படுத்தி துரித சேவைகளை வழங்குதனை நோக்கமாகவும் கொண்டு நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகிவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழு வொன்றினை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.26 / '08

27.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.27 / '08

28.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.28 / '08

29.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப் பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக்கொடுப் பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருது கின்றது.

பா.29 / '08

30.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரச கூட்டுத்தானங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களையும் இயக்குனர் சபைகளையும் நியமித்தல்,— அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களாகவும் இயக்குனர் சபை உறுப்பினர்க ளாகவும் தொழில்சார் கல்வித் தகைமைகள், அனுபவங்கள் உள்ளவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.30 / '08

31.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கிராம உத்தியோகப் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயித்தல்,— நாடு முழுவதும் மீண்டும் நில அளவீடொன்றினை மேற்கொண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.31/ '08

32.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஸ்ரீ லங்கா, வெளிநாட்டு சேவைக்கு வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே ஆட்சேர்த்தல்,— ஸ்ரீ லங்கா, வெளிநாட்டு தூதுவராலய சேவைக்கு ஆட்சேர்க்கும் போது வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே தீர்மானம் எடுப்பதுடன் அடிப்படைக் கல்வித் தகைமைகளை பரிசீலித்தலே நேர்முகப்பரீட்சையின் போது மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.32 / '08

33.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதலும் ஒரே நீதிமன்றத்தில் இடம்பெறக்கூடிய வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.33 / '08

34.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்களை வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேருந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.34 / '08

35.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளான வர்களுக்கான நிவாரணம் அளிக்குமுகமாக சனாதிபதி ஆணைக்குழு,— ஆரம்ப காலம் முதல் இன்றுவரை தாம் கொண்ட அரசியல் கொள்கை காரணமாக அரசியல் பழிவாங்கல்களுக் குள்ளானவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்து நிவாரணம் வழங்குவதற்காக பூரண பலமுடைய சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.35 / '08

36.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனா சிரியர்களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.36 / '08

37.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன் றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 37 / '08

38.

கௌரவ லஷ்மன் நிபுணஆரச்சி,— ஓய்வு பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வு பணிக்கொடை பெற்றுக்கொள்ளப்படாத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*39.

சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 160, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங் கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பதினெட்டுக் கோடியே எண்பது இலட்சம் (ரூபா 188,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு 160 — | சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சு | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | | |
| கருத்திட்டம் 3 (24) | — வனவளங்கள் முகாமைத்துவ கருத்திட்டம் | | |
| | மீண்டுவரும் செலவினம் | ரூ. | |
| | மூலதனச் செலவினம் | ரூ. | 188,000,000 |
| | மொத்தம் | ரூ. | 188,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2008, யூன் மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*40.

சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 160, நிகழ்ச்சித்திட்டம் 01,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங் கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் நூற்றி முப்பது மில்லியன் (ரூபா 130,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| தலைப்பு 160 | — | சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சு | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 01 | — | செயல்முறைச் செயற்பாடுகள் | | |
| கருத்திட்டம் 02 | — | நிருவாகமும் தாபனச் செலவுகளும் | | |
| செலவு விடயம் 2104 | — | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | | |
| | | மீண்டுவரும் செலவினம் | ரூ. | —— |
| | | மூலதனச் செலவினம் | ரூ. | 12,700,000 |
| | | மொத்தம் | ரூ. | 12,700,000 |
| செலவு விடயம் 2105 | — | காணி, காணி அபிவிருத்தி | | |
| | | மீண்டுவரும் செலவினம் | ரூ. | —— |
| | | மூலதனச் செலவினம் | | 117,300,000 |
| | | மொத்தம் | ரூ. | 117,300,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2008, யூன் மாதம் 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப்பார்க்க. இலக்கம் 01 குறைநிரப்பு மதிப்பீட்டின் மொத்தம் ரூபா 188,000,000.

*41.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*42.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*43.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*44.

பாடசாலை ஆசிரியர் ஓய்வூதிய(திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*45.

கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*46.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்,— இரண்டாம் மதிப்பீடு

*47.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*48.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*49.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*50.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*51.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*52.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*53.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*54.

பிரதம அமைச்சரும், உள்ளக நிர்வாக அமைச்சரும், பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறிவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்பு ரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 சனவரி மாதம் 09 ஆம் திகதிய 1531/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2008.03.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக் கப்படுமாக.

*55.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை (தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*56.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*57.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*58.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய

1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*59.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— காவற்றுதுப் பணிகள் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, காவற்றுதுப் பணிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் காவற்றுதுப் பணிகளுக்கான அறவீடு தொடர்பில் ஆக்கப்பட்டு 2007 யூன் மாதம் 11 ஆந் திகதிய 1501/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

*60.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும், பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேர ணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணை யினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்படவேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*61.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*62.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும், படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*63.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , தேசிய பொலிசு ஆணைக்குழுவின், தவிளாசருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*64.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை

புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் சம்பளங்களும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*65.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் சம்பளங்களும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும், படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட

பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*66.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— இலங்கை அரச பொறி யியல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை - 2004,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின 14(3) ஆம் பிரிவின் கீழ், 2006.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை, ஐந்தொகை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வீடமைப்பு, நிர்மாணத்துறை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

*67.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2005,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் கீழ், 2006.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

68.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

69.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

70.

மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

71.

றங்கா கலை நிறுவனத்தைக் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொளண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.